செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௨] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு மார்கழி மீ ௧௭ உ வெள்ளிக்கிழமை (1-1-1971) [இலக்கம் ௧௯

# திருவெம்பாவைத் திருநாட்களில்

## தக்ஷிண கைலாச மான்மியம்

### 9-வது கதிர்காம மகிமையுரைத்தபடலம்

[ "சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி ]

( முன் வளர்ச்சி — 3)

**சுப்பிரமணியக் கடவுள் கதிர்காம கிரிக்கு எழுந்தருளல்.**

கந்தகிரியில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக்கடவுள் தமக்கு மிகவும் விருப்பமுள்ளதாகிய கதிர்காமத்தின் பெருமைகளை வள்ளிநாயகியார் தெய்வயானை அம்மையார் என்னும் இரு சத்திகளுக்கும் உபதேசித்தருளினர். கதிர்காமப் பெருமைகளைக் கேட்ட இருசத்திமார்களும் "சுவாமி, தேவரீருடன் யாங்களும் அந்தத் தலத்துக்கு வரவிரும்புகிறேம்' என்று வேண்டுதல் செய்தார்கள். தேவியவர்களுடைய வேண்டுதலைக் கேட்ட குமாரக் கடவுள் மகிழ்ந்து. வள்ளிதெய்வதயானை என்னும் இரு சத்திகளுடனும் தேவர் முனிவர் வீரவாகு முதலிய வீரர்களுடனும் கந்தகிரியில் இருந்து புறப்பட்டுத் தேவகிரியிற் போய் பின்பு பல தலங்களையும் கடந்து சமுத்திரக்கரையை அடைந்து மரக்கலத்தில் பிரயாணம் செய்தலை ஒரு திருவிளையாடலாக் கொண்டு, "விசுவகன்மனை நோக்கி யாமெல்லாருமேறி இக் கடலைக் கடந்து செல்லும் திறமைவாய்ந்த ஒரு மரக்கலத்தை இயற்றுக" என்று ஆஞ்ஞாபித்தருளினர். விசுவகன்மன் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு மனத்தாற் கற்பித்து மிகப் பெரியதும் அழகுடையதுமாகிய ஒரு மரக்கலத்தை இயற்றினன். அதை அறிந்த கந்தக்கடவுள் திருவருள் புரிந்து, வள்ளி தெய்வதயானை அம்மை என்னும் இரண்டு சத்திமார்களுடனும், வீரர், தேவர், பூதர் முதலியவர்களுடனும் மரக்கலமேறிக் கடலைக் கடந்து இலங்கையின் வடபாகத்தில் இருக்கும் கடற்கரையை அடைந்து அதிலிறங்கினர்கள். காங்கேயன் இறங்கிய காரணத்தினல் அத்துறை இப்பொழுதும் காங்கேயன்துறை என்று வழங்குகின்றது. காங்கேயப் பெருமான் "விசுவகன்மனை நோக்கி யாம் இங்கே தங்குதற்குரிய ஓராலயத்தை அமைக்குக" என்று கட்டளையிட்டார். விசுவகன்மன் கோவிலை

( வளர்ச்சி 4-ஆம் பக்கம் )


## சிதம்பரத்தில்
## மார்கழித் திருவாதிரை மஹோற்சவம்

'கோயில் என்பது தில்லையே' சிதம்பரத்தில் பஞ்சகிருத்தியப் பரமானந்த தாண்டவம் புரியும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெரும னுக்கு மார்கழி திருவாதிரை மகோற்சவம் வழமைபோல நடைபெறும்.

30-12-70 விக்கினேசுவர பூசை நடராஜர் அனுஞ்ஞையுடன் மகோற்சவம் ஆரம்பமாகி 11-1-71 வரை நடைபெறும்.

10-1-70 ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு ஆயிரககால் மண்டபத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகமும், காலை 10 மணிக்கு அலங்காரமும், காலை 9 மணிக்கு சிற்சபையில் சிதம்பர ரகசிய பூசையும், 12 மணிக்கு பஞ்சமூர்த்திகள் வீதியுலாவும், தீர்த்தவாரியும் மார்கழித் திருவாதிரை மகா தரிசன ஞானகாச சித்சபாப் பிரவேசமும், ஆனந்த நடனக் காட்சியும் நடைபெறும்.

11-11-70 திங்கள் முத்துப்பல்லக்கு வீதியுலா. தினசரி வீதியுலாவில் வேதபாராயணமும் தேவாரபாராயணமும் நடை நடைபெறும்.



உ
சிவமயம்

**ஏற்றுயர் கொடி உடையாய்!**

திருச்சிற்றம்பலம்

போற்றி! என் வாழ்முதல்
ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற்
கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத்
தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின்
திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள்
மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை
சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடையாய்!
எனை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி
எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்
—மாணிக்கவாசகசுவாமிகள்

உ
## சைவபரிபாலன சபை
## நால்வர் கோயிற் றிருப்பணிநிதி

| | ரூபா சதம் |
|---|---|
| முன் வரவு | 75-00 |
| திருவாளர்கள்: | |
| க. கனகராசா | 101-00 |
| ஆ தனபாலசிங்கம் | 151-00 |
| சி. கதிரவேற்பிள்ளை | 101-00 |
| திருமதி. | |
| ம அருணசலம் | 101-(0 |
| ஆகக் கூடியது | 479-00 |

குறித்த திருப்பணி போதிய நிதி இன்னும் சேராமையினல் தாமதிக்கப்பெற்றிருக்கின்றது அன்பர்கள் தங்கள் தங்களாலியன்ற நிதியை எமக்குக் காலதாமதமின்றி அனுப்பித் திருப்பணியைப் பூர்த்தி செய்ய உதவி புரிவார்களாக. நிதி உதவுகின்றவர்கள் பெயர் இந்துசாதனத்திற் பிரசுரிக்கப்பெறும்.

திருமதி. ம அருணசலம்,
தனதிகாரி
நால்வர் கோவிற்றிருப்பணிச்சபை
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம். 24-12-70

## திருவெம்பாவையே பாராயணத்திற்குரியது

### பழங்காலச்சம்பிரதாயங்கள் இக்காலத்துக்கொவ்வாதா?

### எம்பெருமான் கைப்பட எழுதப் பெற்ற இணையிலாநூலைஓதிப்பயன்பெறுங்கள்

**" திருவாசகத்துக்கு உருகாதவர் ஒருவாசகத்துக்குமே உருகமாட்டார்!"**

— சித்தாந்த வித்தகர் ஸ்ரீ மு. சோமசுந்தரம் செட்டியார்

"எப்போ தகத்து நினைவார்க்
கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்"



சித்தாந்த வித்தகர் உயர்திரு. மு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள்

சைவ சமய ஆசாரியமூர்த்திகள் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பிரபந்தங்கள் இரண்டு. அவை "திருவாசகமும், திருக்கோவையாரு"மாகும். இவை சைவர்களின் பிரமாண நூல்களான பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக அமைந்துள்ளன. இவை இரண்டையும் நடராஜப் பெருமான் தம் திருக்கரத்தால் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதி வைத்தான் என்றல் இப்பாடல்களின் பெருமை என்ன என்பது! விசேட தீட்சை பெற்ற கிரியையாளராகிய சைவர்களுட் சிலர் நாள் தோறும் திருவாசக பூசை செய்தும், வாசித்தும் வருகிறர்கள் என்றல், என்னே இந்நூலின் சிறப்பு! "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்னும் பழமொழியே (அதனைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் சிவ பக்தியை உண்டுபண்ணி அதில் ஈடுபடுத்துகின்ற) அந் நூலின் பெருமையினை வலியுறுத்தும்.

இனி, இத் திருவாசகமாகிய அருள்நூல், (பதிகம், சதகம் முதலிய) 51 பிரபந்தங்களும் 656 பாடல்களும் கொண்டு விளங்கும். இவற்றுள் ஒன்று "திருவெம்பாவை" இது திருவண்ணாமலையில் அருளிச் செய்யப் பெற்றது. மற்றொன்று "திருப்பள்ளி எழுச்சி"; இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப் பெற்றது. இதனைத் தினந்தோறும் விடியற் காலையில் எல்லாச் சிவ ஆலயங்களிலும் ஓதுவார்கள். ஓதுவது வழக்கம். திருவெம்பாவையை மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாளுக்குமுன் ஒன்பது நாட்களிலும் ஓதல் வேண்டும் என்பது மரபு. இதன் கருத்து உலகம் ஒடுக்கப்பட்டுத் திருமுறைகளும் ஒடுக்கப்பெற்றுள்ளன என்பதாகும். திருவாதிரை அன்று நடராஜப் பெருமான் ஒடுக்கிய உலகத்தை மீளப் படைத்துக் காக்கிறர் என்றும், திருமுறைகளும் வெளிவருகின்றன என்றும், அன்று முதல் மக்கள் எல்லாத் திருமுறைப் பாடல்களையும் படனம் செய்யலாம் என்றும் ஆன்றோர் கூறுவர். முன் கூறிய ஒன்பது நாட்க

( வளர்ச்சி 4- ஆம் பக்கம் )

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# ஊனையும் உயிரையும் உருக்கி, தேனினைச் சொரிந்து தெவிட்டா இன்பந்தருந் திருவாசகம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஞூ மார்கழி மீ கஎ-உ வெள்ளிக்கிழமை [1971]

## ஒழுக்கத்தைக் காப்பாற்றுக

அண்மையில் நடைபெற்ற பௌத்த காங்கிரஸ் மகாநாட்டின் தலைவர் கலாநிதி குணபாலா மலல சேகரா அவர்கள் தமது தலைமையுரையில் இக்காலம் நாட்டில் காணப்படுகின்ற ஒழுக்கக் குறைவை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர். பொதுக் காரியங்களில் பகிரங்கமான நேர்மைக் குறைவு, பணியாளர் மனச் சாட்சியுடன் கடமையாற்றாமை, கொலை, களவு முதலிய குற்றங்கள் அதிகரிக்கின்றன. உத்தியோகம், செல்வம் உள்ளவர்களிடத்திலும் ஒழுக்கக் குறைவைக் காணக்கூடியதாயிருக்கின்றது இவற்றுக்கு மேலாகச் சமயத்தின் பேரால் போலிச் செயல்கள் நிகழ்கின்றன". கலாநிதியவர்கள் மன வருத்தத்துடன் இக் கருத்துக்களை வெளியிட்ட பின்பு பௌத்த சங்க அங்கத்தவர்களைச் சமய நெறியில் ஒழுகி மக்களுக்கு முன் மாதிரியாக வாழ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இளைஞர்களை வீரத்துடன் அற வாழ்வு நடத்தவேண்டுமெனவுங் கேட்டுக்கொண்டனர்.

சுப்பிரமணியக் கடவுள் வீரவாகுதேவரைச் சூரபன்மனிடம் தூதனுப்பியபொழுது வீரவாகுதேவர் சூரபன்மனுடைய நகரின் கோபுரத்தின் மீதிருந்து அந் நகரின வளங்களையெல்லாம் பார்த்தார். சூரபன்மன் தன்னுடைய ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள வளங்களையெல்லாம் அந் நகருள் தொகுத்து வைத்தான். தருமத்தையும் சத்தியத்தையும் அன்பையும் அவர் அங்கு காண முடியவில்லை தேவர்களுடன் அவற்றையும் சிறையில் வைத்துவிட்டான் போலுமென அவர் எண்ணினர்.

> உரை செயாயிரத்தெட்டே னுமண்டத்தி லுளவாய்
> கரையில் சீரெலாந் தொகுத்தன னீண்டவை கண்டாந்
> தருமமெய் யளிகண்டில மவற்றையுந் தந்து
> சுரர்க டம்முடன் சிறையி லிட்டான்கொலோ சூரன்

வீரவாகுதேவர் சூரபதுமனைப் பார்த்து "நீயும் உன் கிளையும் உய்ய வேண்டுமாயின் தேவர்களுடைய சிறையை விடுத்துத் தரும நெறியில் வாழுதி; நீ தேவர்களுடைய சிறையை நீக்கி, இவ்வளங்களையெல்லாந் தருமநெறியால் அனுபவித்து நெடுங்காலம் வாழ்வாய்" என்று கூறினர், சூரபன்மன் வீரவாகுதேவருடைய உரைகளை யேற்கவில்லை, பின்பு போர் நிகழ்ந்தது சுப்பிரமணியக் கடவுளுடன் போர் செய்தான். அவர் சூரபன்மனைச் சங்கரித்தார்.

நாட்டில் மக்கள் தருமத்தையும் சத்தியத்தையும் அன்பையும் பாதுகாத்து வாழ்க்கையை நடத்தினல் ஒருவித துன்பமுமில்லை. முதியோர்களின் வாழ்வு முறை இளைஞர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற நல்ல முன் மாதிரியாதல் வேண்டும். நாட்டில் நல்லொழுக்கத்தைப் பாதுகாப்பதற்குச் சிறந்த வழி தருமத்தையும் சத்தியத்தையும் அன்பையும் பேணுதலேயாகும்.

## கோணேசர் கோயிற் கோட்டை

திருஞானசம்பந்த சுவாமிகளால் தேவாரம் பாடப்பெற்ற திருக்கோணாசலச் சிவாலயம் அமைந்துள்ள கோட்டைக்கு 'இராஜசிங்கன் கோட்டை' என்ற நாமத்தைச் சூட்ட கல்ாசார மந்திரியவர்கள் தீர்மானஞ் செய்துள்ளாகத் தெரிய வருகின்றது. இக் கோட்டைக்கு அந்நியராட்சியின் பின்பு 'பிரடரிக் கோட்டை' என்ற பெயர் வழங்கி வந்தது. அப்பெயரை மாற்றுவதை நாங்கள் ஒப்புக்கொள்ளுவோம். ஆனல் அதற்குப் பதிலாக வைக்கும் பெயரைக் கலாசார மந்திரியவர்கள் தன்னிஷ்டப்படி மாற்றுவது ஜனநாயக ஆட்சி நிலவும் நாட்டிற்குப் பொருத்தமான செயலல்ல. திருக்கோணாசலம் என்னும் புராதனச் சிவாலயம் அங்கு இருக்கின்றது அதனைப் பண்டைக்காலந் தொடக்கம் இந்துக்களும், பௌத்தர்களும் வழிபட்டு வந்தார்கள். சிங்கள மன்னர்கள் அக் கோவிலுக்குத் திருப்பணி புரிந்துள்ளனர், சர்வமான்யமும் வழங்கியுள்ளனர். முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் பொருட்களுக்கும் பிந்தியதாயுள்ள சிவபெருமானுடைய திருநாமத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு பெயரையே அக் கோட்டைக்குயிடுவது பொருத்தம் அதனை யாவரும் ஏற்றுக்கொள்வர். அக்கோட்டைக்கு வைக்கும் பெயரைத் தீர்மானஞ் செய்தற்கொரு குழுவை நியமனஞ் செய்வதே பொருத்தமாகும்.

---

மார்கழித் திருவாதிரைக்கு முன் ஒன்பது நாட்களிலும்
**ஆன்மார்த்தம், பரார்த்தம்** இரண்டிலும்
**திருவெம்பாவையையேஓதல்வேண்டும்**
— ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர்.

## திருவெம்பாவை வரலாறு

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

பசு, பாச ஞானங்களால் காணமுடியாத இறைவனை மாணிக்கவாசக சுவாமிகள் இறைவன் திருவடி ஞானத்தால் கண்டார். அப்பெருமானின் இன்பத்தில் திளைத்தார். அவரது பக்திப் பாடல்கள் ஊனையும உருக்கும், உயிரையும் உருக்கும், ஏழ்பிறப்புக்கும் இறவாத இன்ப அன்பையும் ஊட்டும். இப்படிப்பட்ட திருவாசகத்துள் திருவெம்பாவை ஒரு பகுதி. (திரு+எம்+பாவை) இது பாசமாகிய இருளை நீக்கி பேரருளைக் கொடுக்கும் ஆற்றலுடையது. இப்பிரபந்தத்துள் சிவபெருமானது பேரருளையும், பெண்கள் உலகுய்ய மழை வேண்டியும், தங்களுக்கு நல்ல சிவனடி மறவாத கணவர்கள் வாய்க்க வேண்டியும், பார்வதி அம்மையாரை (பாவை) வழிபட்ட முறையினையும், இறைவன் ஞானசாரியனாக எழுந்தருளிப் பக்குவப்பட்ட உயிர்களுக்குச் செய்யும் தீட்சா முறைகளையும் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காணலாம்.

பழங்காலத்தில், சைவ, வைணவ கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில், வைகறையில் நீராடி, மேற்குறித்த வேண்டுதல்களைப் பெற பராசத்தியை வணங்கினார்கள். இதனையே, ஆன்றோர் "பாவை நோன்பு" என்றும் சொல்வர். இதன் உண்மையை விளக்கவே, இப்பிரபந்தத்திற்குப் பெரியோர்கள் "சத்தியை வியந்தது" என்ற தலைப்பைக் கொடுத்தார்கள் போலும். அறிவனூற் பொருளும் உலக நூல் வழக்கும் என இரு பொருளும அமையப் பாடிய அறிவாற் சிவனே என்ற மணிவாசகர் மாண்பை அறிவார் மிகச்சிலரே.

இப்பிரபந்தத்தின் வரலாற்றை இரு வகையாகப் பிரித்துக் கூறுவர் அறிஞர்கள். 5 வயது முதல் 12 வயது வரை, வயது வகையால் வேறுபட்ட கன்னிப் பருவத்துப் பெண்கள் எட்டுப் பேர்களும்; "பாவை நோன்பை" மேற்கொள்ளுதற்குத் தகுதியுள்ளவர்கள். 12 வயதுடைய பெண்கள் தாங்களே, நித்திரைவிட்டெழுந்து, தங்களையொத்த பருவத்தினரான மற்றப் பெண்களை எழுப்பினார்களென்றும், இம்முறையே 11, 10, 9, 8, 7, 6, 5 என்னும் வயதினராகிய கன்னிப் பெண்கள் எழுப்பப்பட்டனர் என்றும் திருவெம்பாவையின் முதல் பாட்டு முதல் எட்டாவது பாட்டுவரையில் கூறப்பட்டிருக்கின்றது, (ஆதியும் அந்தமுமில்லா.... தொடங்கி கோழி சிலம்ப .......... என்பது முடியும் வரையும் 8 பாட்டு) என்பர் ஒரு சாரார். ஏனைய பாட்டுக்களில் இறைவனது ஐந்தொழில், தீக்ஷா முறை மழைபெய்ய வேண்டினது, தக்க கணவன்மாரை வேண்டினது முதலியன பேசப்பெற்றுள்ளன.

இனி தத்துவப் பொருள் (ஞானக் கருத்து) கூறும் மற்றொரு சாரார் இப்பிரபந்தத்தில் முதல் எட்டுத் திருப் பாட்டுக்கள் வரை ஒவ்வொரு திருப்பாட்டிலும் ஒவ்வொரு பெண்ணே எழுப்பப் பட்டனராக அவ்வெட்டுப் பெண்களோடு முதலில் எழுப்பிய ஒருத்தியையுஞ் சேர்த்துக் கணக்கிட்டு ஒன்பது பெண்களாதலின், அவ்வொன்பது பேர்களும் நவசக்திகளாவார் என்றும, அவர்கள் முறையே மனோன் மணி, சர்வ பூத தமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை ஆகிய சக்திகள் எனவும், இவர்களின் இயக்கத்தால், மாயை காரியப்பட்டு, பிரபஞ்ச காரியம் நடைபெறுகின்றென்றும், இது குறித்தே இப் பகுதிக்கு "சக்தியை வியந்தது' என்னும் தலைப்

வளர்ச்சி 3-ம் பக்கம்



## மகாசந்நிதானமாவார்

நல்லை. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன கிளைத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்களுக்கு தமிழ் நாட்டிலிருந்து திரும்பியபொழுது சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது தம்பிரான் அவர்களுக்கு 'மகாசந்நிதானம்' என்ற பட்டம் எதிர்வரும் வைகாசி மாதத்தில் வழங்கப்படும் அதற்குரிய வைபவங்களில் தமிழ்நாட்டிலிருந்து மூன்று மகாசந்நிதானங்கள் சமுகமளிப்பார்களெனவும் அறிகின்றோம்.

## சமய அறிவுப் போட்டி

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் வழமையாக நடாத்தப்பட்டு வரும் சைவசமய அறிவுப் போட்டி, 2-2-71 இல் நடைபெறும். போட்டியில் பங்குபெற விரும்புவோர் தபால் மூலமோ, நேர்முகமாகவோ தொடர்பு கொள்ளலாம், ம சுப்பிரமணியம், கௌரவ செயலாளர்; 142, நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு, வலந்தலை சயம்பு வீதி, திரு அருணசலம் தம்பையா அவர்களிடம் 1969ம் ௵ எப்பிரல் மீ 1ம் உ (1-4-69) திகதிக்கு முன் அடைவுவைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் 1971-ம் ஜனவரி மாதம 28-ம் திகதி (28-1-71) வியாழக்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எம. 448 1, 8—1—71

## ஊனையும் உயிரையும் உருக்கி

( 2-ம் பக்கத்து வளர்ச்சி

புக் கொடுக்கப்பட்டது எனவும் கூறினர்.

தமிழ்நாட்டின் பெண்கள் பருவநிலை ஏழுவகை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவை முறையே, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகும்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ள பாட்டிலும் காட்டுதும்.

பேதையே பெதும்பை,
மங்கை பெருகிய
மடந்தையோடு
நீதிலாவரிவை மறைறத்
தெரிவை பேரிளம்
பெண்ணென்ப
ஏதமில் பருவமாண்டே
ழேழ்து பன்னென்று பன்மூன்
ரேது பத்தோன்பானை
யைந்துடன் முப்பத்தோன்
றென்னைந்தே

இப்பிரபந்தத்துள் பேசப் பட்ட பெண்கள் பேதை, பெதும்பை மங்கைப் பருவத்துடையவர்கள்.

5 வயது முதல் 7 வயது வரையுள்ள பருவ பேதை என்றும்,
8 வயது முதல் 11 வயது வரையுள்ள பருவம் பெதும்பை என்றும்,
12 வயது மங்கைப் பருவந்தொடக்கம் என்றும், நூல் கூறுகின்றது.

5 வயதுக்கு முற்பட்ட பருவம் குழந்தைப் பருவமாதலின்; அது பெண்மைப் பருவத்திற்குள் எண்ணப்படவில்லை. ஆதலால் 5வயது முதல் 12 வயது தொடக்கம வரை கன்னிப்பருவம் எனப்படும்.

தமிழ் அகப்பொருள் நூல்களும கன்னிப் பருவத்தின் கருத்தைப் பதினோராண்டும் பத்துத்திங்களும் கழிந்த பின்பு 'மணப்பருவம்' என்று பேசும்.

இதனால் 5 முதல் 12வரையுமுள்ள எண் 8, பாவை நோன்பை மேற்கொண்டவர்களும் இவ்வெட்டு வகைப் பெண்களே யாவர். 12 வயதுள்ள பெரிய பெண்கள் முதலில் தாங்களே துயில் நீத்தெழுந்து, இறைவன் புகழைப் பாடிக்கொண்டு, தம்மோடொத்த மற்றொரு 12 வயதுடைய பெண்ணை, நீராடிவர எழுப்பினரென்றும், இவர்கள் மற்ற 8 பேர்களை எழுப்பினர் என்றும் கொள்ளலாம் 12 வயது மூத்த பெண்கள் முதலில் எழுந்தார்கள் என்றும், அடுத்த வயதுள்ள பெண்கள் கொஞ்ச நேரம் கழித்து எழுப்பப் பட்டார்கள் என்றும் பொருந்தும். பெண்களை அழைத்த முறைகளை இதற்குச் சான்று கூறும். பின்பு எல்லாப் பெண்களும் ஒன்று சேர்ந்து நீரிலாடி இறைவனை வழிபட்டார்கள் என்பது கருத்தாகும்.

## நூல் வெளியீடு

மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் 27-வது வெளியீடாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உரையுடன் கூடிய "ஆத்திசூடி" என்னும் நீதி நூல், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், அவ்வாதீனத் தலைவராகிய ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் திருவெம்பாவை பூசை ஆரம்பத்திலே வெளியிடப்பட்டது


### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |


### நன்கொடை

காலஞ்சென்ற வேலணை மேற்கு. திருமதி. சின்னையா பிள்ளை இளையபிள்ளை அவர்களின் ஞாபகமாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு ரூபா 10/- நன்கொடையாகப் பெற்றுக்கொண்டோம். அம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக

—தனாதிகாரி
சைவபரிபாலன சபை

இடையில் – பார்வதியம்மையாரைப் பாராட்டியிருத்தலால் – சத்தி வழிபாடும் செய்யப்பட்டதைக் காணலாம்.

இனி, இந் நோன்பைப் பற்றி, ஆயர்குலப் பெண்கள் – கண்ணனைக் கணவனாக அடைய, பார்வதிதேவியாரை வழிபட்டார்கள் என்று, செவ்வைச் சூடுவார் – பாகவதம் பேசும்:-

"இன்ன தண்பனிப் பருவ
நல்லிளநரு வொழுகும்
கன்னி யந்துழாய்க் கண்ணன்
எங்கணவனாகென்ன
அன்ன மென்னடை யாயர்தங்
கன்னியர் நோற்றூர்
மன்னுவெம் பனிமால் வரைக்
கன்னியைத் தொழுதே"
பனிநிலாக் கதிர் பரப்பிய
முத்த வெண் மணலால்
பனிவரைக் கொடி திருவுருப்
பாற் பட வகுத்துப்
பனிமலர்த் தொடை சூடியும்
பரவியு நோற்றும்
பனியிறப் பினற் படர்
புனலாடுவான் படர்ந்தார்

குறிப்பு:— ஆண்களும் பெண்களுமாகிய அடியார்கள் எல்லாரும் மார்கழித் திருவாதிரைக்கு முன் 9 நாளும் ஆன்மார்த்தம, பரார்த்தம என்னும் இரண்டிலும் – இத்திருவெம்பாவையையே ஓதல் வேண்டும். திருவாதிரையில் திருவெம்பாவையை ஓதி, பின் வழக்கப்படி தேவாரம் முதலியனவும் ஓதல் வேண்டும்.

(இரண்டாம் பாலபாடம்)
(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்)

## சிவனடியாரைப் பேணுக



பக்தர்: "சிவசின்னங்களையும், சிவனடியார்களையும் பேணாத வரை சைவமக்களுக்குமீட்சியில்லை" என்று 'சிவநெறிக் காவலர்' முதலியார் முத்துத்தம்பி அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானுக்கு நேற்று நிகழ்ந்த வரவேற்பு விழாவில் கூறி வருத்தப் பட்டிருக்கிறார் பாருங்க?

சித்தர்: "போதனைகளைச் சாதனையில கொண்டு வர வேண்டும்" என்று எந்தச் சமூகம் நினைக்கவில்லையோ அது இருள்சூழ்ந்து இன்னல்களுக்குட்பட்டுழலுவது நாம் அநுபவத்திற் கண்ட ஒன்றுதானே? இன்றைய நிலையை முதலியார் அழகாகக் கூறியிருக்கிறாரய்மான்.

"நாயன்மார் – நாதன்"

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 9681

சின்னையா மனுநமசு வேதுருப்பிள்ளை வண்டிமாம்பிள்ளை கோவில் ஒழுங்கை, ஒட்டுமடம் வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். – வழக்காளி

எதிராக

1 மஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ் ஆஸ்ய், 79 கல்லக் ரோட். கொழும்பு 5
2 பெண் அன் தெரேசு புஷ்பம் நாகநாதனை, ஊர்காவற்துறை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 9681—ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1971-ஆம் ௵ பெப்ரவரி மாசி) மாதம் 8-ஆம் திகதி (8-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 4640/-ம் 13-1-68 தொடக்கம் 23-8-69 வரைக்கும் ரூபா 4000/-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 579-41 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனை இறை 'பெரியகக்குப்பகம்' (Periyakakuppakam) நிலப்பரப்பு 30 இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 10 பெவிற்றஸ் என்பவருக்கு விற்கப்பட்டபடியால் இதை தவிர்த்து மிகுதியாய் உள்ள நிலப்பரப்பு 20 தெற்குப் புறமாக இதற்குள் வீடு தலைவாசல், குசினி, கிணறு, தென்னை மற்றும் செய்பயிர்களும் வான்பயிர்களும் உள்ளன. எல்லை கிழக்கு. தெற்கு ஒழுங்கைகள், வடக்கு யோசப்பிள்ளை பெண் பெவிற்றஸ் இன் ஆதனம் மேற்கு பீற்றர் பெண் எல்லனுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலின் பிரிவிடப்படாத அரைவாசிப் பங்கும் அதன் சொத்துரிமைகளும்

ப நா. தருமலிங்கமும்
கொமிசனரும்.விலைமதிப்பாளரும்
167. கோவில் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

31-12-70 M 447, 1-1-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், நல்லூர். காலஞ்சென்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்களின் தத்துவ வழக்கு

தத்துவ வழக்கு இல: 1015 T.

யாழப்பாணம், தற்பொழுது இளவாலை, பெரியவிளான் ஆறுமுகம் வேலுப்பிள்ளை கைம்பெண் கற்பகம் —தத்துவகாரி

எதிராக

யாழ்ப்பாணம், நல்லூர், 15 செட்டித்தெரு.

1. வேலுப்பிள்ளை நவரத்தினராசா, 2. வேலுப்பிள்ளை பத்மநாதன் 3. எஸ். இராசரத்தினமும் பெண் 4. கமலாம்பிகையும் 5. வேலுப்பிள்ளை குலசிங்கம் 6. வேலுப்பிள்ளை மகள் தனபாக்கியலட்சுமி இப்பொழுது கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் மனைவி இளவாலை. பெரியவிளான் 7. வேலுப்பிள்ளை மகள் தவமணிதேவி 8. வேலுப்பிள்ளை சண்முகராசா 9 வேலுப்பிள்ளை மகள் நகுலேஸ்வரி 10. வேலுப்பிள்ளை மகள் யோகேஸ்வரி 11. வேலுப்பிள்ளை மகள் தனலெட்சுமி 12. வேலுப்பிள்ளை மகள் புவனேஸ்வரி 7ம், 8ம், 9ம், 10ம், 11ம். 12ம் எதிர்வாதிகள் வயது குறைந்தவர்கள். இவர்களது பாதுகாவலன் 13ம் எதிர்வாதி; 13. கந்தையா திருநாவுக்கரசு பெரியவிளான். இளவாலை தற்போது சங்கரத்தை, வட்டுக்கோட்டை —எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1015 T. இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை உத்தரவுபெற்ற உலாந்தா P. A. சேனாதிராசா அவர்களால் 13—10—70 ல் அளந்து தயாரிக்கப்பட்ட 416ம் இலக்கங் கொண்ட படத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறபடியும் கீழே விபரிக்கப்பட்டிருக்கிறபடியும் நாலு துண்டுகளாக 1971ம் ஆண்டு தை மீ 28-ந் திகதி (28-1-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தத் துண்டுக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் ஆகக்கூடிய கேள்விக்காரர்களுக்கு விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மட்டுவில் தெற்கு இறை ,விண்ணன் காந்திடல்வளவு வெவில் வளவும் மணற்காடு வளவும்'' நில பர. 114½ம் பயிர்வகைகளும் ஆனால் மேற்காட்டிய படத்தின்படி நில பர. 117 குளி 06 எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு மார்க்கர் நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கும் தெற்கும் இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இது மேலே குறிப்பிட்டிருக்கும்படி 4 துண்டுகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவையின் விபரம் பின்வருமாறு:

1. துண்டு இல: 1 நில. பர. 27 குளி 06ம் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கையொழுங்கையும் மார்க்கர் நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்களும் மேற்கு இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள தெற்கு குறிப்பிட்ட படத்தில் துண்டு 2.

2. துண்டு இல. 2 நில பர. 30ம் பயிர் வகைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு குறிப்பிட்ட படத்தில் துண்டு 1 மேற்கு இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு குறிப்பிட்ட படத்தில் துண்டு 3

3 துண்டு இல:3 நில, பர 30 பயிர்வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு குறிப்பிட்ட படத்தில் துண்டு 2 மேற்கு இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு குறிப்பிட்ட படத்தில் துண்டு 4.

4. துண்டு இல 4: நி. பர. 30ம் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு குறிப்பிட்ட படத்தில துண்டு 3 மேற்கு இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு இராமு ஞானசேகரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள்.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொம்மிஷனர் &. விலைமதிப்பாளர்

22. கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

எம் 319 1—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னப்பு குணரத்தினம், நவாலி —வழக்காளி

இல: M B, 7501 D. C. J. எதிராக

1 முருகன் கைம்பெண் அன்னப்பிள்ளை
2 முருகர் வேலுப்பிள்ளை
(இறந்த முதலாம் எதிரியின் தத்துவகாரர்)
3 முருகர் நடராசா
4 முருகர் குமரேசு
5 பெண் இத்தம்மா, நவாலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7506ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ம் ௵ தை மாதம் 18-ந் திகதி (18-1-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1962-50ம், 24-6-65 தொடக்கம் 26-1-66 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 376-46 ஏற்பட்ட செலவு ரூபாய் 242-72 கூடிவான செலவு ரூபா 65 - 62 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபாய் 69 - 12 இதில் ரூபாய் 100/- கட்டப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை ஒற்றிகொண்டான் நி. பர. 16 ½ குளி வீடும் பங்குக் கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கிளை ஒழுங்கையும் கிணறும் கந்தர் சின்னத்தம்பிக்குரியது, வடக்கு சுப்பர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய காணி மேற்கு சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை தெற்கு 2ம் காணி இதிற சோரியலாய் 7/8 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும். ப. இ. E. 361/47

2 டி இறை ஒற்றிகொண்டான் 16 ½ குளி பனைகள் வான்பயிர் செய்பயிர்களும் கிழக்கெல்லை கிளை ஒழுங்கை முகப்பிலிருக்கும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு கிளை ஒழுங்கை வடக்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் காணி, மேற்கு சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளைக்கும் நாகமுத்து பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் உரிய காணிகள் தெற்கு தெய்வானைப்பிள்ளைக்குரிய காணி, ப. இ. E 157/111

மா. முருகேசு J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்,

'இந்திர பவனம்''
புன்னாலைக்கட்டுவன். 21-12-70

எம் 443 1—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. மூத்துக்குமாரு கைம்பெண் செல்லம்மா
சங்கானை மேற்கு — வழக்காளி
இல: M B 10115 D. C. J. எதிராக
1. கந்தையா சிவசம்பு 4 கந்தையா கனகசபை, பண்டத்தரிப்பு
2. பெண் இராசம்மா 5. கதிராமர் சின்னப்பு, சில்லாலை.
3. கந்தையா திருநாவுக்கரசு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10115 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1971ம் ஞு தை மீ 21-ம் திகதி (21-1-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 8006-75ம், 27-6-68 தொடக்கம் 8-11-68 வரைக்கும் ரூபாய் 4500/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 513-51 ஏற்பட்ட செலவு ரூபாய் 320-47 சதம் முடிவான செலவு ரூபாய் 92-82 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபா 100-22 சதம்

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை பயற்றம்புலம் இளவிகலட்டி நிலப்பரப்பு 5 குளி 2 பனைகள் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு தில்லையம்பலம் சின்னையாவுக்கும் பெண் பொன்னம்மாவுக்குமுரிய ஆதனம். மேற்கு கீழே சொல்லப்பட்ட 2ம் காணி, தெற்கு 1ம் எதிரிக்குரியது: இதடங்கலும் கிணறு தவிர்ந்த மற்றவைகளும் மேற்கெல்லைக் காணிக்கு வழிவாய்க்காலுரித்தும். ப. இ. H. 342/19

2. ஷெ இறை பயற்றம்புலம் இளவிகலட்டி நிலப் பரப்பு 5½ வடமேற்குப் புறமாக 4½ குளி நீங்கலாக மிகுதியாக நி. பர. 1½ வட கிழக்கு மூலையில் பொதுப் பாவிப்புக்காகத் தவிர்கப்பட்டிருக்கிறது. மிகுதியான நி. பர. 5ல் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு மேற்கூறிய 1ம் காணி வடக்கு நாகமணி கந்தையாவினுதனம், மேற்கு பொதுப் பாவிப்பு நிலமும் நீக்கிலாப்பிள்ளை பெண் மதலீனத்துக்கும் இளையதம்பி இராசரெத்தினத்துக்குமுரிய ஆதனம், தெற்கு 1ம் எதிரியினுதனம் இதடங்கலும் பொதுப் பாவிப்புக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தூடாக ஒழுங்கைப் பிரவேசமுண்டு கிணறு நீங்கலக வடக்கு கிழக்கு எல்லைக் காணிகளுக்கு தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் தண்ணீர்ப் பங்கும் மற்றவைகளும், நீக்கிலாப்பிள்ளை பெண் மதலீனத்துக்குமுரிய காணிக்கும் பொதுப் பாவிப்புக்குவிடப்பட்ட நிலத்தூடாக வழிவாய்க்கால் சென்று வழமையான வழிவாய்க்காலூடே செல்கிறது. தண்ணீர்ப் பங்கும் மற்றவைகளும் மேற்குக் காணிக்குரித்தான கனகசபை பெண்நாகம்மாவுக்கு வழிவாய்க்காலுரித்துண்டு, ப. இ. E. 334/216.

3. ஷெ இறை வயிரவனடைப்பும் மற்றவைகளும் நி. ப. 2 பனைகள் வடலிகள் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு 5ம் எதிரியினுதனம், மேற்கு சூசைப்பிள்ளை சூசனத்துக்குரிய காணி சங்கானைக் கிராம எல்லைக்குரியது. தெற்கு வேலுப்பிள்ளை பொன்னுச்சாமிக்கும் தில்லையம்பலம் கந்தையாவுக்குரிய காணி. இதடங்கலும் தெற்கெல்லைக் கிணறு நீங்கலாக தண்ணீர் பங்கும் மற்றவைகளும் கிழக்கெல்லைக் கூடாக 5 முழ அகலமுள்ள வழிவாய்க்கால் உரிமையும், ப. இ. 226/52

இந்திரபவனம், மா. முருகேசு J. P.
புங்குடுதீவு. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 444 1-1-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10691
வயிரமுத்து ராமலிங்கம் பண்ணாகம் தெற்கு. சங்கானை மேற்கு
எதிராக —வழக்காளி
1 ஆறுமுகம் குமாரவேலுவும்
2 பெண் நாகமுத்து இருவரும் வலிப்படைப்பு
சங்கானை மேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9673-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஞு மாசி மீ 13-ம் திகதி (13-2-71) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4420/-ம் 20-5-69 தொடக்கம் 3-11-69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 492-30 இதில் ரூபா 3000/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோவிற்பற்று சங்கானை மேற்கிறை "தம்பனையும வால்சிட்டி" என்னும் காணி நி. ப. 7ம், 10 குளியும் கிணறும் செய்பயிர் வான்பயிரும் எல்லை கிழக்கு நாராணபிள்ளை கார்த்திகேசு, வடக்கு கோவிந்தி பெண் முத்து மேற்கு ஒழுங்கை, தெற்கு வேலு கந்தையா நடராசா பெண் பொன்னம்மா வடக்குப் பக்கத்துக் காணிக்காரருக்கு தண்ணீர்ப் பங்கு இல்லை, பதிவு இலக்கம்: 321/264

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
(எம், 440 1-1 7)

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 1—1—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## திருவெம்பாவை ......

1ம் பக்கத்து வளர்ச்சி

ளிலும் திருவெம்பாவைப் பாடல்கள் இருபது தவிர வேறு எந்தத் திருமுறைப் பாடல்களையும் ஓதக்கூடாது என்பது பழங்காலச் சைவ சமய சம்பிரதாயம்.

திருவண்ணுமலையில் மார்கழி மாததகில் அநுட்டிக்கும் தம் நோன்புக்கு விடியற் காலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி நீராடச் சென்றதைக் கண்ட வாதவூரார், நவசக்திகள் தம்முள் தொழிற்படும் முறையைக் குறித்து, திருவெம்பாவைப் பாடலைப் பாடினு என்ப.

[சைவபரிபாலனசபை, (யாழ்ப்பாணம்) 1969ஆம் ஆண்டில் நடத்திய அகில இலங்கைச் சைவமகாநாட்டில் தலைமைதாங்கிய சைவப் பெரியார் சித்தாந்த வித்தகர் திரு. மு சோமசுந்தரச்செட்டியார் அவர்கள் "மில்க் வைற் சோப்" தொழிற்சாலை அதிபர் (15 ஆவது வெளியீடாக வெளியிட்ட "திருவெம்பாவை - திருப்பள்ளி யெழுச்சி" என்னும் நூலுக்கு முகவுரையாக உதவப்பெற்றது ]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 7696
காலஞ்சென்ற சவரிமுத்து ஜெபமாலை, றெகிளமேஷன் ரோட்; குருநகர், யாழ்ப்பாணம்
—வழக்காளி
1 S. செபமாலை கைம்பெண் பிலோமினம்மா
2 எலாயன் இம்மானுவல் இராஜேஸ்வரி
3 எலாயன் இம்மானுவல்
4 செபமாலை யூலியஸ்
5 செபமாலை ஜெயசீலன்
6 செபமாலை சத்தியசீலன்
7 செபமாலை குணசீலன்
8 செபமாலை ஞானசீலன்
9 செபமாலை மகள் சாக்கிய தேவி, 4ல் இருந்து 9 வரை அனைவரும் மைனர்கள் இவர்களுக்காக மேல்காட்டிய முதலாவது வழக்காளி பிலோமினம்மா பதில் வழக்காளி
எதிராக
பாவிலுப்பிள்ளை செபஸ்தியான் பிள்ளை, மூளாய் ரோட். சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7696ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1971-ம் ஆண்டு தை மீ 18ம் திகதி (18-1-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைதொகை: முதல்வட்டி ரூபா 2970/- 21-9-65 தொடக்கம் 1-6-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-83 சதம், ரூபா 1000/- 15-1-69ல் கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிகுளி கோவிற்பற்று சுண்டிக்குளி "சோனகைப் பெரியவளவு" ப. நி 4ம் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு முடியப்பு மரியாம்பிள்ளை உரிமைககாரருக்குரிய ஆதனம், வடக்கு அந்திரேசு செபமாலைக்குரிய ஆதனம், மேற்கு வைத்திலிங்கத்துக்குரிய ஆதனப. தெற்கு ரோட்டு இது அடங்கலும்.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எலத்தாரர்.
"விதானை வளவு"
சித்தன்கேணி. 8-12-70.
எம். 438 1-1-71

## தக்ஷிண கைலாச மான்மியம்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

அமைத்தான். கந்தக் கடவுள் கோயிலில் வீற்றிருந்தருளினர். தேவர்கள் பூஜித்து வணங்கினர்கள், குமாரக் கடவுள் மரக்கலமேறி கந்தவனத்துக்கு வடபால் உள்ள கடலில் நிறுத்தி அதினின்றும் இறங்கினர். விசுவகன்மன் ஆலயத்தை கந்தவனத்திலுள்ள வன்னி மாச்சோலையில் அமைத்தான். கடவுள் ஆலயத்தில் வீற்றிருந்தருள தேவர்கள் பூசித்து வணங்கினர்கள்.

பின்பு, சுப்பிரமணியக் கடவுள் அவ்விடத்திலிருந்து மரக்கலமேறித் திரிகோணமலை என்னும் தெட்சிண கைலாசத்துக்குப் பக்கலாக உள்ள கந்தமலை சமணுசலம் கண்டகி வடகாந்தாரம் சம்மோககிரி (உகந்த மலை) முதலிய மலை இடங்களில் குமாரக் கடவுளினுடைய ஆஞ்ஞையின் வண்ணம் விசுவகன்மன் ஆலயங்களை அமைக்க சுப்பிரமணியக் கலத்தில் இருந்து இறங்கி அவ்வாலயங்களில் எழுந்தருள தேவர்கள் பூசைசெய்து வணங்கி அருள்பெற்றர்கள்.

சுப்பிரமணியக் கடவுள் உகந்த மலையில் இருந்து வீரவாகு முதலிய சேனைகளுடன் கூடியவராய் கதிர்காமகிரியிற்போய் உலகங்கள் உய்யும்படி அங்குள்ள சிந்தாமணி ஆலயத்தில் வள்ளி தெய்வயானை அம்மை என்னும் இருசத்திமாருடனும்; தேவர் வீரர் முனிவர் முதலியவர்கள் வணங்கித் துதிக்க எஞ்ஞான்றும் எழுந்தருளி இருக்கின்றனர்.

கந்தப்பெருமான் ஏறிச்சென்ற மரக்கலம் உகந்த மலைக் கணிநதாகிய ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு இப்பொழுதும் சிலை வடிவமாகக் காணப்படுகின்றது.

[வளரும்]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வேலாயுதர் ஐயாத்துரை கோண்டாவில் —வழக்காளி
வழ. இல: M. B. 9526 எதிராக
1. சின்னத்தம்பி வல்லிபுரம்
2. பெண் பரமேஸ்வரி கோண்டாவில் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9526 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1971ம் ஞு மாசி மாதம் 8-ம் திகதி (8-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதலும்வட்டியும் 3018/- ரூபா இன்னும் 28-10-67 தொடக்கம் 24-6-69 வரைக்கும் 2500/- ரூபாவிற்கு 10 வீத வட்டியும் கூட்டிக் கூடிய தொகைக்கு 24-6-69 துவக்கம் முழுப்பணமும் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 400/40 சதமும் (ஏற்பட்ட செலவு 267/20, வெளியாத்துச் செலவு 72/-, இனிமேலேற்படுஞ்செலவு 61/20)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "பெரியபுலம்" பா. நில. வா. 3 பயிர்களும், வடக்கே இருக்கும் கிணற்றிற் பங்கும் 2¼ குளி அகலம் கொண்ட தூர்வையுருத்தும் வீடும் எல்லை கிழக்கு சின்னத்துரை கைம்பெண் கோவிந்தம்மாவிற்கும் வினுசித்தம்பி பெண் செல்லம்மாவிற்குமுரிய ஆதனம். வடக்கு — கிணறும தூர்வையும் ரத்தினம் கைம்பெண் அழகம்மாவிற்குமுரியவாதனம். மேற்கு-கந்தையா கைம்பெண் சின்னத்தங்கச்சிக்குரியவாதனமும் பிரதான ஒழுங்கையும். தெற்கு-சின்னத்துரை கைம்பெண கோவிந்தம்மாவிற்குரியவாதனம். பதிவு இலக்கம்: D. 211/113

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28,1. யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 437 1-1-71
23-12-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
புங்குடுதீவு மேற்கு மாரிமுத்து முருகேசு —வழக்காளி
வழ: இல. M B 9357 எதிராக
புங்குடுதீவு மேற்கு, 1. ஆறுமுகம் சபாரத்தினமும் பெண்
2. அமிர்தமும், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9357 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு மாசி மீ 15-ம் திகதி (15-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3916/- இதில் ரூபா 1650/-க்கும் 23—8—67 தொடக்கம் 17—9—68 வரைக்கும் 100க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 310-50; செலவழித்த செலவு ரூபா 196 80; வெளியாத்துச் செலவு ரூபா 61-25, எதிர்வரும் செலவு ரூபா 52-45

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "அண்டியன் காடு" (ANDIYANKADU, நி. பர. 15 (பதினைந்தும்) வீடும்; கிணறும், எல்லை கிழக்கு கதிர்காமு பெண் கல்லம்மாவினுதனம். வடக்கு இராமலிங்கம் பெண் அருளம்மாவினுதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு சுப்பையா கனகசபையினுதனம, இதடங்கலும.

க. சுப்பிரமணியம்
நம: 24, 1-ம்குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 14-12-70 M, 439 1-1-71